भारतीय डाक
India Post

सत्यमेव जयते

**DEPARTMENT OF POSTS, INDIA**
**Business Development Cell**
**Office of the Postmaster General, Chennai City Region, Chennai 600002**
**(Tel. No. 28594745, 28594761; 28521444 – Extn. 323, 336)**

## PRESS RELEASE

### இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கி - IPPB

பிரதம மந்திரியின் சுதந்திர தின உரைக்குப் பின்னர், விரைவில் துவக்கப்பட இருக்கும் இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கி குறித்த மக்களின் எதிர்பார்ப்பை அதிகரிக்கும் விதமாக, இந்திய அஞ்சல் துறையானது, தன் பயணத்தின் மிக முக்கிய மைல்கல்லைக் கடக்கிறது. இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கியானது நிறுவனச் சட்டம் 2013 (Companies Act 2013)ன் கீழ், பெருநிறுவன விவகார அமைச்சகம் (Ministry of Corporate Affairs) பெருநிறுவனங்களின் பதிவாளர் (Registrar of Companies)-இடம் இருந்து 17.08.2016 அன்று கூட்டிணைவுச் சான்றிதழ் (Certificate of Incorporation) பெற்றுள்ளது. இதுவே இந்திய அஞ்சல் துறையின் முதல் பொதுத்துறை நிறுவனமாகத் (PSU) திகழப் போகிறது.

இதன் தொடர்ச்சியாக, இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கி வாரியம் ஒன்று அமைய இருக்கிறது. வரையறுக்கப்பட்ட இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கியின் துவக்கம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இதுவே வங்கித் தொழிலில் பண்பட்டவர்களை இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கிப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கும், வங்கியை நிறுவி தன் பணியை 2017ல் துவங்குவதற்கும் வழி வகுக்கிறது. இந்திய அஞ்சல் துறை, இந்த பணப் பரிவர்த்தனை வங்கியை செப்டம்பர் 2017-க்குள் தனது அனைத்து கிளைகளையும் நிறுவி செயல்படுத்தும் பணியை நிறைவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது உலகிலேயே எந்த ஒரு வங்கியும் நிறுவிய விரிவாக்கத்தையும் விட விரைவானதாகும். வங்கிச்சேவையின் சிறப்பான உள்ளீடுகளைக் கொண்ட பணப் பரிவர்த்தனைத் தொழில்நுட்பத்தின் மூலமாக உலகிலேயே அதிகம்பேர் அணுகக்கூடிய வங்கியாகத் திகழ்வதே இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கியின் வேட்கையாகும். நாடெங்கிலும் வியாபித்துள்ள 1.55 இலட்ச அஞ்சல் நிலையங்களும் மற்றும் எங்கும் அடைய வல்ல தபால்காரர்களின் மூலமாக இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கியானது நிதி நிர்வாகத்தில் நாட்டின் சக்திமிக்க மற்றும் செயல்திறம் உள்ள வங்கியாக திகழும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தேசிய அளவிலான நவீன பணப் பரிவர்த்தனை முறையை வழங்கவும், அனைவராலும் பயன்படுத்தக்கூடிய வகையில் முழுமையான தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் செயல்படவும் இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கி முனைந்துள்ளது. அரசுத் தரப்பிலும், வெளியிலும் உள்ள இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கி பங்காளர்கள், இந்திய அஞ்சல் பணப் பரிவர்த்தனை வங்கியின் வரவை, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டின் கிரியா ஊக்கியாகவே கருதுகின்றனர்.

Chennai 600002
22nd September 2016

Postmaster General
Chennai City Region

सत्यमेव जयते

भारतीय डाक

India Post

**DEPARTMENT OF POSTS, INDIA**
**Business Development Cell**
**Office of the Postmaster General, Chennai City Region, Chennai 600002**
**(Tel. No. 28594745, 28594761; 28521444 – Extn. 323, 336)**

**PRESS RELEASE**

# India Post Payments Bank Incorporated

Soon after the Prime Minister's Independence Day address, raising the expectations of the people from the soon to be set up India Post Payments Bank, the Department of Posts has cleared an important milestone on this journey. The India Post Payments Bank Limited on 17.8.16 received the Certificate of Incorporation from the Registrar of Companies, Ministry of Corporate Affairs under the Companies Act 2013. This would be the first PSU under the Department of Posts.

With the incorporation, the Board of the India Post Payments Bank Limited is likely to be constituted soon. The incorporation of the IPPB Ltd is a significant step forward as this also paves the way for the bank to begin hiring of banking professionals to set up the bank and begin its operations in 2017. The Department of Posts is expected to complete the roll out of its branches all over the country by September 2017. This could be the fastest roll out for a bank anywhere in the world. The aspiration for the India Post Payments Bank is to become the most accessible bank in the world riding on state of the art banking and payments technology. Coupled with the physical presence across 1.55 lakh post offices and the reach of "The Dakiya", the India Post Payments Bank aims to become a powerful and effective vehicle of real financial inclusion in the country. It is poised to create a national payments architecture riding on a modern payments platform and ubiquitous information and communication technologies that can be accessed by all users and service providers like never before. The stakeholders of the India Post Payments Bank within the Government and outside are looking at this new entity as a catalyst to social and financial inclusion.

Chennai 600002
22nd September 2016

Postmaster General
Chennai City Region